**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**O.S. No.466/2021**

**தேதி : 27.09.2023**

**(வா.சா.– 1) – திரு. வஜ்ரவேல்**

**சாட்சி அழைக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை : (பிரதிவாதி தரப்பில்)**

நானும், 1, 2 வாதிகளும் பிராதில் சொல்லியுள்ள முகவரியில் தான் வசித்து வருகிறோம். 1, 2 வாதிகளின் ரேசன் கார்டு உள்ளிட்ட அடையாள ஆவணங்கள் வழக்குரையில் சொல்லப்பட்ட முகவரியில் இருக்கிறது. என்னுடைய ரேசன் கார்டு நடுத்தெரு முகவரியில் உள்ளது. எனது முகவரிக்கும், சம்மந்தப்பட்ட வீட்டிற்கும் 500 மீட்டர் தூரம் இருக்கும். நானும், 2–ம் வாதியும் சம்மந்தப்பட்ட வீட்டில் குடியில்லை என்றால் சரியல்ல, நான் அங்கு தான் குடியிருந்தேன், பிரச்சனையான பிறகு தான் வெளியேறிவிட்டேன். 2–ம் வாதியும் அங்கு குடியில்லை. தாவா சொத்து எனது தகப்பனாருக்கு பூர்வீக சொத்தா என்றால் அது என் தகப்பனாருக்கு செட்டில்மெண்ட் மூலமாக கிடைக்கப்பெற்றது. எனது தகப்பனார் இறந்த பிறகு எனது அம்மா மற்றும் உடன்பிறந்த மூன்று சகோதரிகள் பாகவிடுதலை ஆவணத்தை வாதிகளான எங்களுக்கு எழுதிக்கொடுத்துள்ளனர். தாவா சொத்தில் நாங்கள் யாரும் குடியில்லை என்றால், அவ்வப்போது சென்று வருவோம். எனது தகப்பனார் 1981 ஆம் ஆண்டு செட்டில்மெண்ட் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த மூலப்பத்திரத்தில் கழிவறை உரிமையைப் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதி தனியாக கழிப்பறை கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் 3 வருடங்களுக்கு முன்பாக கழிப்பறை கட்டினார். எனக்கு பாத்தியப்பட்ட வீட்டில் கழிப்பறை கட்ட இடம் உள்ளது என்று நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. குளிப்பதற்கு மட்டும் இடம் உள்ளது. கழிப்பறை சேதமடைந்த காரணத்தினால் கெட்ட வாடை ஏற்படுவதால் அதனை மூட முனிசிபாலிட்டியில் சொல்லி பிரதிவாதி நடவடிக்கை எடுத்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி வீட்டுக்கும் எங்கள் வீட்டுக்கும் ஒரே வாசல். எங்கள் வீட்டின் சர்வே எண்.558/1. அந்த கழிப்பறைக்கு செல்லக்கூடிய பாதையின் சர்வே எண்.558/4. சர்வே எண்.558/4–க்குரிய பட்டா மற்றும் ஆவணங்கள் பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். 2020 ஆம் வருடம் சர்வேயர் அளந்தபோது தான் மேற்படி தகவல் எனக்கு தெரியும். பிரதிவாதி 11.02.1966 ஆம் தேதி குழிவேல்

மகள் அமராவதியம்மாளிடம் பிரதிவாதியின் பாட்டியான அங்கம்மாள் எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரத்தின்படி பாத்தியமானது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. என் தகப்பனார் செட்டில்மெண்ட் வாங்கியது 1981 என்றாலும், அதற்கு 20 வருடங்களுக்கு முன்பாகவே பிரதிவாதியின் பாட்டி கிரையம் பெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் படித்து தெரிந்துகொண்டேன். 1966 ஆம் வருட கிரைய ஆவணத்தில் கழிப்பறை வசதியையும் சேர்த்து தான் பிரதிவாதியின் பாட்டிக்கு கிரையம் வழங்கப்பட்டுள்ளது என்றால், கிரையம் கொடுத்தாலும் பொதுவாக அனுபவிக்கவேண்டுமென்றே சொல்லப்பட்டுள்ளது. பிரதிவாதியின் மீது கழிப்பறையை இடித்துவிட்டதாக சொல்லி புகார் கொடுத்தது 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆகும். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது 2022 ஆம் ஆண்டு ஜனவரி. இடித்ததாக சொல்லப்படுவது டிசம்பர் மாதம் 2021. இந்த பிரதிவாதியின் மீது டிசம்பர் 2021 க்கு முன்பாகவே மதுரை உயர்நீதிமன்றத்தில் நான் ஒரு உத்தரவை பெற்றுள்ளதாகச் சொன்னால் சரிதான். எனக்கும், இந்த பிரதிவாதிக்கும் கழிப்பறை பிரச்சனை, பாக பிரச்சனை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது என்றால் 2020 ஆம் வருடத்தில் இருந்து பிரச்சனை இருந்து வருகிறது. நகராட்சியில் சர்வே செய்து பிரதிவாதியின் இடம் எனது இடத்திற்கு ஒட்டி மார்க் செய்துவிட்டு சென்றார்கள் என்றால் சரிதான். நானும், பிரதிவாதியும் உறவினர் கிடையாது என்றால், நெருங்கிய உறவினர் கிடையாது. தூரத்து உறவினர். உறவுமுறை அடிப்படையில் நாங்கள் பாகம் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். வெவ்வேறு ஆட்களிடம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். நான் அந்த வீட்டில் குடியிருக்கவில்லை என்றால் நான் சில சமயங்களில் அங்கும் குடியிருப்பேன், கழிவறை இல்லை என்பதால் பெண் குழந்தை இருப்பதால் வாடகை வீட்டில் குடியிருக்கிறேன். சம்பவம் நடந்தபோது வேறு ஒருவர் தான் என் வீட்டில் குடியிருந்தார் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார் மீதான விசாரணையில் பிரதிவாதி மீது தவறு இல்லை என்று Mistake of Fact அடிப்படையில் அறிக்கை உள்ளது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. பிரதிவாதி அவருக்கு உண்டான இடத்தில் கழிப்பறை கட்டியுள்ளார் என்றாலும், எனக்கு கழிப்பறை கட்ட இடம் இருந்தாலும், பிரதிவாதியின் கழிப்பறையை ஆக்கிரமிக்க முயற்சிப்பதாகச் சொன்னால் சரியல்ல. எங்கள் வீட்டில் குலதெய்வ வேல் வைத்து வழிபாடு செய்வதால் நாங்கள் கழிப்பறை கட்ட முடியாது. பொதுக்கழிப்பறையை பயன்படுத்தி வருகிறோம். அது பொதுக்கழிப்பறையாக எப்போதும் இருந்தது இல்லை என்றாலும், பிரதிவாதி வீட்டுக்குள் ஒரு கழிப்பறை கட்டிக்கொண்டு வெளியில் இருந்த கழிப்பறையை இடித்தார் என்றால் சரியல்ல,

அதனை பொதுக்கழிப்பறையாகவே இருவீட்டாரும் பயன்படுத்தி வந்தோம். அந்த கழிப்பறை உள்ள இடம் பிரதிவாதியின் கிரையத்திற்கு கட்டுப்பட்ட இடம் என்றால் சரியல்ல. பாதையின் கிழக்கு மற்றும் மேற்கு இருபுறமும் பிரதிவாதியின் வீடு தான் உள்ளது என்றாள்ல சரிதான். எனது வீடு கடைசியில் துண்டாக உள்ளது என்றால் சரிதான். எனது வீடு பராமரிப்பு இல்லாமல் சேதமடைந்த நிலையில் உள்ளது என்றால் சரியல்ல, கழிவறை மட்டுமே சேதமடைந்த நிலையில் உள்ளது. தற்போதும் நாங்கள் வீட்டுக்கு சென்று வருகிறோம். நான் பிரதிவாதியின் வீட்டை விலைக்கு கேட்டு பிரதிவாதி கொடுக்கவில்லை என்பதால் இவ்வாறான வழக்கை தாக்கல் செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. எனக்கு உரிமை இல்லாத சொத்தை அனுபவ பாத்தியமாக கோரி அடைய முயற்சி செய்வதாக சொன்னால் சரியல்ல. தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2023.09.29 15:58:38 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,

பழனி.